பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
24 03 2025 7 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா மாநிலங்களில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

2. மத்திய அரசு செயல்படுத்தி வரும் குடிநீர் திட்டங்களால் மக்களின் ஆரோக்கியம் மேம்பட்டுள்ளதாக நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் தெரிவித்துள்ளார்.

3. மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு மனோகர் லால் கூறியுள்ளார்.

4. புதிய மருந்துப் பொருட்கள் கண்டுபிடிப்பில் உயிரி தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

5. உலக கோப்பை கபடி போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா பட்டம் வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

ராய்ப்பூரில் நடைபெறவுள்ள சத்தீஸ்கர் சட்டப்பேரவையின் வெள்ளி விழாக் கொண்டாட்ட நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் பங்கேற்கிறார்.

பின்னர் ஒடிசா செல்லும் அவர், நயாகரில் நடைபெறும் விழாவிலும் பங்கேற்கிறார்.

<<<<>>>>

மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு மனோகர் லால் கூறியுள்ளார்.

ஒடிசாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கிய நகர்ப்புற மேம்பாட்டு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து நேற்று ஆய்வு மேற்கொண்ட அவர், புவனேஸ்வர், கட்டாக், பூரி உள்ளிட்ட நகரங்களை மேலும் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

நகர்ப்புற போக்குவரத்தை ஊக்குவிப்பதற்காக, பிரதமரின் மின்சாரப் பேருந்துகள் திட்டத்தின் கீழ் ஒடிசாவுக்கு 400 மின்சார பேருந்துகளை வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

புவனேஸ்வர் மெட்ரோ ரயில் திட்டத்தை ஆய்வு செய்த திரு. மனோகர் லால், பொதுப் போக்குவரத்து தேவைகளைப் பூர்த்தி செய்ய மத்திய அரசு முழு ஆதரவு வழங்கும் என்றும் உறுதியளித்தார்.

<<<<>>>>

ஜம்மு-காஷ்மீரில் 370வது பிரிவு ரத்து செய்யப்பட்ட பின்னர் திரைப்படத் தொழில்துறை பெரிய வளர்ச்சியை அடைந்து வருவதாக துணைநிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா கூறியுள்ளார்.

ஜம்முவில் திரைப்பட விழா நிகழ்ச்சி ஒன்றைத் தொடங்கி வைத்துப் பேசிய அவர், சமூக மாற்றத்திற்கான சக்திவாய்ந்த ஊடகமாக திரைப்படம் உள்ளது என்றார்.

சிறந்த திரைப்படக் கொள்கையின் மூலம் ஜம்மு கஷ்மீரில் துடிப்பான திரைப்பட சூழல் அமைப்பை உருவாக்க அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த கொள்கை உள்ளூர் கலைஞர்களுக்கு பெரிய ஊக்கத்தை அளித்துள்ளது என்று திரு. மனோஜ் சின்ஹா கூறினார்.

<<<<>>>>

சமூகத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு ஊடகங்கள் செயல்பட வேண்டும் என்று மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

நாக்பூரில் நாளிதழ் ஒன்றின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் பேசிய அவர், தவறுகளைக் கண்டிக்கும் அதே வேளையில் நேர்மறையான விஷயங்களை ஊடகங்கள் பாராட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தற்போது பல நல்ல விஷயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை என்று கூறிய அவர், நேர்மறையான செய்திகளை வழங்குவதற்கு ஊடகங்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

நாக்பூரில் முழு அமைதி திரும்பியுள்ளதாக மகராஷ்டிர முதலமைச்சர் திரு தேவேந்திர ஃபட்னாவிஸ் கூறியுள்ளார்.

புனேவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் காரணமாக இனி அங்கு ஊரடங்கு தேவை இல்லை என்றும் தெரிவித்தார்.

இதனிடையே ஊரடங்கு உத்தரவு விலக்கிக்கொள்ளப்பட்டாலும் காவல்துறை தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாக நாக்பூர் காவல் ஆணையர் திரு ரவீந்திர சிங்கால் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

சண்டிகரில் கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற கையெறி குண்டு தாக்குதல் வழக்கில் பாபர் கல்சா பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த நான்கு பேருக்கு எதிராக தேசிய புலனாய்வு முகமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சண்டிகரில் உள்ள என்ஐஏ சிறப்பு நீதிமன்றத்தில் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

சட்டவிரோத நடவடிக்கைகள் சட்டம் உள்பட பல்வேறு பிரிவுகளின்கீழ் இவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து இதுகுறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மத்திய அரசு செயல்படுத்தி வரும் குடிநீர் திட்டங்களால் மக்களின் ஆரோக்கியம் மேம்பட்டுள்ளதாக நீர்வளத்துறை அமைச்சர் திரு சிஆர் பாட்டீல் கூறியுள்ளார்.

குஜராத்தின் சூரத்தில் மழைநீர் சேகரிப்பு திட்டங்களை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ், பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு முயற்சிகளின் ஒரு பகுதியாக 27 ஆயிரத்து 300 மழைநீர் சேகரிப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்த மழை நீர் சேகரிப்பு இயக்கம் மாற்றத்தை ஏற்படுத்துதில் முக்கியப் பங்கு வகிப்பதாக கூறினார்.

ஜல்ஜீவன் உள்ளிட்ட திட்டங்களால் மக்களின் மருத்துவ செலவு குறைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் இதுவரை 8 லட்சத்து 55 ஆயிரம் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் 10 லட்சம் கட்டமைப்புகளை ஏற்படுத்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக திரு சிஆர் பாட்டீல் கூறினார்.

<<<<>>>>

புதிய மருத்துப் பொருட்கள் கண்டுபிடிப்பில் உயிரி தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஜம்முவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உயிரி உற்பத்தியில் உலக அளவில் முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றார்.

உயிரி தொழில்நுட்பத் துறையை மேலும் வலுப்படுத்த ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவை என அவர் வலியுறுத்தினார்.

அரசு, தனியார்துறை, தொழில்துறையினர் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையே அதிக ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் கூறினார்.

உயிரி தொழில்நுட்பத்தின் உதவியுடன் சுகாதாரத் துறையில் புதுமைகளைப் புகுத்துவதில் அரசு உறுதியுடன் உள்ளதாக திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

கோவா சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

3 நாட்கள் இந்த கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது.

நிதித்துறைப் பொறுப்பை வகிக்கும் முதலமைச்சர் திரு பிரமோத் சாவந்த் நாளை மறுநாள் அவையில் பட்ஜெட்டை தாக்கல் செய்யவுள்ளார்.

<<<<>>>>

தில்லி சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

இந்த கூட்டத்தொடர் வரும் 28-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

தில்லி போக்குவரத்துத் துறையின் செயல்பாடுகள் குறித்த சிஏஜி அறிக்கை இன்று அவையில் தாக்கல் செய்யப்பட உள்ளது.

வரும் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டை, நிதித்துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா நாளை அவையில் தாக்கல் செய்கிறார்.

<<<<>>>>

பசுமை எரிசக்தியின் மூலம் பெண்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாக பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் சோன்பத்ராவில் பெண்களுக்கு சூர்ய சக்தி அடுப்புகளை நேற்று அவர் வழங்கினார்.

நாட்டில் எரிசக்திப் புரட்சியை ஏற்படுத்தும் மற்றொரு முயற்சியாக இந்த சூரிய சக்தி அடுப்புகள் அமைந்துள்ளது என அவர் கூறினார்.

பிரதமரின் இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டத்தைப் போலவே இத்திட்டமும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி பெண்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தியன் ஆயில் நிறுவனம் இந்த அடுப்புகளை வடிவமைத்துள்ளதாகவும் இது நாட்டின் எரிசக்திப் பாதுகாப்பை வலுப்படுத்துவதுடன் தற்சார்பை அடைவதில் முக்கிய பங்காற்றும் எனவும் திரு ஹர்தீப் சிங் பூரி கூறினார்.

<<<>>>>

பிரபல காந்தியவாதியும், சமூக சேவகருமான பாசலா கிருஷ்ண பாரதி வயது முதிர்வு காரணமாக ஹைதராபாதில் காலமானார். அவருக்கு வயது 92.

அவரது மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

காந்திய கொள்கைகளில் உறுதியுடன் செயல்பட்ட பாசலா கிருஷ்ண பாரதியின் மறைவு, வருத்தம் அளிப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

ஆந்திர முதலமைச்சர் திரு சந்திர பாபு நாயுடுவும் பாசலா கிருஷ்ண பாரதியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

<<<>>>>

நாட்டின் மத்திய மற்றும் வடமேற்கு பகுதிகளில் அடுத்த சில நாட்களில் 3 முதல் 5 டிகிரி செல்சியஸ் வரை வெப்ப நிலை உயரக் கூடும் என வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

குஜராத், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் 5 டிகிரி செல்சியஸ் வரையும், மகராஷ்டிராவில் 4 டிகிரி செல்சியஸ் வரையும் வெப்ப நிலை உயரும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

கேரளா, மாஹே, கடலோர ஆந்திரா, ராயலசீமா மற்றும் தெற்கு உள் கர்நாடகாவில் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<>>>>

தேசிய கடல்சார் விளையாட்டுகள் மும்பையில் நேற்று தொடங்கியது.

கப்பல் போக்குவரத்து இயக்குநரகம் ஏற்பாடு செய்துள்ள இந்தப் போட்டியை இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் பி.டி.உஷா தொடங்கி வைத்தார்.

20 க்கும் மேற்பட்ட விளையாட்டு போட்டிகளுடன் ஏப்ரல் 4-ம் தேதி வரை இப்போட்டி நடைபெறுகிறது.

<<<<>>>>

உலக கோப்பை கபடி போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா பட்டம் வென்றது.

**Wolverhampton**-னில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்தியா 44-41 என்ற புள்ளிக் கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

முன்னதாக நடைபெற்ற மகளிர் பிரிவு இறுதியாட்டத்தில் 57-34 என்ற புள்ளிக் கணக்கில் இந்திய அணி வெற்றி பெற்றது.

------------

புதுதில்லியில் நடைபெற்று வரும் கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டியில் தமிழகத்தின் ரமேஷ் சண்முகம் 3 தங்கப் பதக்கங்களை வென்றார்.

குண்டு எறிதல், ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டம் மற்றும் 100 மீட்டர் ஓட்டப் பிரிவுகளில் அவர் இப்பதக்கங்களைக் கைப்பற்றினார்.

நீளம் தாண்டுதலில் ஆனந்த்ராஜ் முருகன் மற்றும் ஜீவானந்தமும் தங்கப் பதக்கம் வென்றனர்.

---------------

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் 4 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணி, மும்பை அணியை வென்றது.

<<<<>>>>